**O.S. No. 85 /2014**

**Date: 26.11.2025**

**வா.சா .1.செல்வராஜ்**

**குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி**

எனக்கு சொந்த ஊர் ரெட்டியப்பட்டி. எனது தொழில் விவசாயம் . எனக்கு சொந்தமாக 12 ஏக்கர் நிலம் உள்ளது என்றால் சரிதான். நான் 12 ஏக்கர் நிலம் வைத்திருப்பதை காட்டுவதற்குண்டான ஆவணங்கள் எதையும் நான் தாக்கல் செய்துளளேனா என்றால் இல்லை. நான் பிராது தாக்கல் செய்த காலத்தில் பிரதிவாதியை தனிநபராக காட்டி தான் வழக்கு தாக்கல் செய்தேன் என்று சொன்னால் சரிதான். வழக்கு தாக்கல் செய்யப்பட்ட காலத்திலேயே பிரதிவாதி பிறவியிலேயே மனநலம் பாதிக்கப்பட்டவர் என்றால் சரியல்ல. பிரதிவாதி மனநலம் பாதிக்கப்பட்டவர் என்ற விவரத்தை தெரிந்து கொண்டே தான் வழக்கை தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல. பிரதிவாதி தரப்பில் நீதிமன்றத்தில் I.A.386/2015 என்ற மனுவை தாக்கல் செய்து அந்த மனுவின் பேரில் திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு பிரதிவாதி ஆணையர் மூலமாக அனுப்பப்பட்டு மனநல மருத்துவ குழுவால் பரிசோதனை செய்யப்பட்டு மேற்படியார் மனநலம் பாதிக்கப்பட்டவர் என்று சான்றிதழ் வழங்கப்பட்டதன் பேரில் மேற்படி மனு அனுமதிக்கப்பட்டு பிரதிவாதியின் சகோதரர் சீனிவாசன் பிரதிவாதிக்கு பாதுகாவலராக நியமிக்கப்பட்டார் என்றால் சரிதான். மேற்படி மருத்துவ அறிக்கையில் பிரதிவாதி மனநலம் பாதிக்கப்பட்டவர் என்றும், அவருக்கு 50 % அளவு கூட பகுத்தறியும் திறன்(IQ) இல்லை என்பதாக அறிக்கை வழங்கப்பட்டது என்றால் தெரியாது. மேற்படி விவரங்களை தெரிந்து கொண்டு வழக்கிற்காக தெரியாது என்று சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. I.A339/2014 என்ற மனுவானது பிரதிவாதியின் சொத்தினை முன் தீர்ப்பு ஜப்திக்காக தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். அந்த மனுவில் காட்டப்பட்டுள்ள சொத்தின் சர்வே எண் தெரியாது. அந்த சொத்து யாருடைய பெயரில் உள்ளது என்றால் தெரியாது. நான் போட்ட ஆவணங்கள் வா.சா.ஆ.2 பாகப் பத்திரம், வா.சா.ஆ.3 கிரைய பத்திரம், வா.சா.ஆ.4 பொது அதிகார ஆவணம், வா.சா.ஆ.5 அடமானம் போன்ற ஆவணங்கள் பற்றி தெரியுமா என்றால் சுப்புராஜ் ஆவணங்கள் இருப்பதை காட்டுவதற்காகவும், ஜப்தி செய்வதற்காகவும் தாக்கல் செய்தேன். மேற்படி ஆவணங்களில் கண்ட சொத்துக்களில் பிரதிவாதிக்கு எந்த

உரிமையும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.1 புரோநோட் 30.07.2011 ல் எழுதப்பட்டது. மேற்படி ஆவணத்தில் செல்லையா, மாரியம்மாள் சாட்சி கையொப்பம் இட்டுள்ளனர். ஜெயலட்சுமி ரேகை வைத்தார். மேற்படி ஆவணத்தை எழுதியவர் திருவள்ளுவர் அவர் சங்கரன்கோவிலை சேர்ந்தவர். புரோநோட் எங்கள் வீட்டில் வைத்து எழுதப்பட்டது. மேற்படி திருவள்ளுவரை ஜெயலட்சுமி தான் அழைத்து வந்தார். எங்கள் ஊருக்கும் கரிவலத்திற்கும் 6 கி.மீ தூரம். எங்கள் ஊருக்கும் சங்கரன்கோவிலுக்கும் 16 கி.மீ.தூரம். அவ்வளவு துாரத்தில் இருந்து அழைத்து வர வேண்டிய அவசியம் என்ன என்றால் நான் அழைத்து வரவில்லை ஜெயலட்சுமி தான் அழைத்து வந்தார். மாரியம்மாள் என்பவர் எனக்கு உறவினர் என்று சொன்னால் சரியல்ல. மாரியம்மாள் என்பவர் எனக்கு உறவினர் என்பதாலும்,, மோசடியாக ஆவணத்தை உற்பத்தி செய்வதற்கு அவரை பயன்படுத்திக்கொண்டேன் என்று சொன்னால் சரியல்ல. செல்லையா, திருவள்ளுவர் சேர்ந்து தான் மோசடி ஆவணத்தை உருவாக்கினோம் என்றால் சரியல்ல. மனநலம் பாதிக்கப்பட்ட பிரதிவாதிக்கு ரூ. 7,00,000/-கொடுக்கும் அளவுக்கு எனக்கு எந்தவிதமான பண வசதியும் இல்லை என்றால் சரியல்ல. ஜப்திக்காக தாக்கல் செய்த மனுவில் உள்ள சொத்துக்கள் சேதுராமனுக்கு பாத்தியப்பட்டது என்று தெரிந்தும், சொத்துக்களை கைப்பற்றவேண்டும் என்ற எண்ணத்தில் மேற்படி மனுவை தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.5 ல் கண்ட சுப்புராஜ் என்பவர் யார் என்றால் தெரியாது. சுப்புராஜ் என்பவர் எனக்கு உறவினர் என்றாலும், அவர் மூலமாக மேற்படி சொத்தினை அபகரிக்கும் நோக்கில் அடமான வழக்கு அசல் வழக்கு எண்.193/2020 ஜெயலட்சுமிக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்த வா.சா.ஆ.1 கடனுறுதி சீட்டு மோசடியானது என்பதால் அது சட்டப்படியான ஆவணம் அல்ல மற்றும் செல்லத்க்கதல்ல என்றால் சரியல்ல. எனவே, பிரதிவாதியின் செலவு தொகையுடன் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

(Sd/-) P.Mahindra Varma
Subordinate Judge,
Sankarankovil.